தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 26, திருவள்ளுவர் ஆண்டு - 2044

2013 மே 9, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

அனைத்து மொழி எழுத்துகளும் 'அ' என்னும் எழுத்தினை முதலாகக் கொண்டு தொடங்குகின்றன. அதேபோல் இந்த உலகமும் ஆதி பகவன் என்னும் கடவுளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 440, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 441, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

441—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***21542—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் பேரூராட்சி, திருவள்ளுவர் நகரிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, செங்கம் பேரூராட்சி, திருவள்ளுவர் நகரில் அங்கன்வாடி மையம் 1982 ஆம் ஆண்டு முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. இந்த மையத்திற்கு 2005-2006 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அரசுக் கட்டடம் கட்டப்பட்டது. இக்கட்டடம் குழந்தை வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்படைக்கப்படவில்லை. மாறாக, இந்தக் கட்டடத்தில் நுகர்வோர் பண்டகக் கடை (Ration Shop) *நடத்தி வருவது தற்போது தெரிய வந்துள்ளதால் கட்டடத்தைக் குழந்தைகள் நல மையத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்திலே ஒவ்வொரு நாளும் விதி 110-ன்கீழ் என்னென்ன அறிவிப்புகள் வரும், அவற்றால் நமக்கு நன்மைகள் கிடைக்குமா என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற தமிழக மக்கள் இதய நாடித் துடிப்போடு எதிர்பார்க்கின்ற அளவுக்கு நல்ல திட்டங்களை அறிவிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தரணி போற்றும் தன்னிகரில்லாத் தலைவி, தமிழுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஈடில்லா தலைவி, கேள்வி வருவதற்கு முன்பாகவே மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, 'செய்வேன்' என்று சொல்லாமல், 'செய்து காட்டுவேன்', 'கச்சத் தீவையும் மீட்டுத் தருவேன்', (மேசையைத் தட்டும் ஒலி) என்று பேருரை ஆற்றிய அன்பிற்குரிய அன்னையை வணங்குகிறேன். எனது செங்கம் தொகுதி, திருவள்ளுவர் நகரிலே செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையம் இன்று விழுமோ அல்லது நாளை விழுமோ என்கின்ற அளவுக்குப் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அதைப் பூட்டி வைத்துவிட்டு வெளியிலே*

அமர்ந்துதான் வேலை செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை நேரடியாக ஆய்வு செய்து அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அந்தக் கட்டடத்தை உடனடியாகப் புதுப்பிக்க முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அங்கன்வாடி மையம் பழுதடைந்திருக்கிற காரணத்தால்தான் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் புதிய மையம் கட்டப்பட்டது. ஆனால், அந்த ஊரிலே இருக்கிற மக்கள், பண்டகசாலைதான் தங்களுக்கு அவசியம் தேவை, எனவே அதை நடத்துவதற்கு அந்தக் கட்டடம் வேண்டும் என்று கேட்ட காரணத்தால் மாவட்ட நிருவாகம் அந்தக் கட்டடத்தை பண்டகசாலை நடத்துவதற்கு அனுமதித்திருக்கிறது. ஆனால், இப்போது அந்த அங்கன்வாடிக் கட்டடம் பழுதடைந்திருக்கிறது. அதைப் புதுப்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை வைத்த காரணத்தினால் உடனடியாக மையத்திற்காக கட்டப்பட்டிருக்கின்ற அந்தக் கட்டடத்தை அங்கன்வாடி மையத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டுமென்று மாவட்ட நிருவாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை வைத்தவுடனேயே செய்து கொடுப்பேன் என்று வாக்குறுதி அளித்த தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 442, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

LEGISLATURE ... TRUTH ALONE TRIUMPHS